*1974 சனவரி 19]*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, மதுரை, கோவை ஆகிய இடங்களில் இருக்கும் ஆலோசனைக் குழு வேறு. 'ப்ரொடக்டிவிடி கவுன்சில்', விவசாயத்துறை வளர்ச்சிக் குழு, சென்னையில் இருப்பது வேறு. சென்னையில் உள்ள இந்தக் குழுவிற்கு என்னென்ன பணிகள் என்று விவர அறிக்கை அச்சிடப்பட்டு உறுப்பினர்களின் முன்னால் வைக்கப் பட்டுள்ளது.

பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம்

*20 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கரில்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) இரண்டு இலட்சம் ஏக்கர்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குப் போதுமான பருத்தி நம்மிடத் தில் இல்லை. வெளிமாநிலங்களிலிருந்து வர வேண்டிய அவசியத் தில் இருக்கிறோம். எனவே இந்தக் குறையைப் போக்கும் வகையில் இன்னும் அதிகமான ஏக்கர்களில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டத்தை அரசு கொண்டுவருமா? இப்படிக் கொண்டு வருவதால் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, ஆண்டுக்காண்டு அதிகமாகப் பருத்தி விளைச்சலாகிக்கொண்டு வருகிறது தமிழகத்தில். இருந்தாலும் தமிழகத்தில் உள்ள மில்களுக்குத் தேவையான பருத்தி விளையவில்லை என்பது உண்மை. ஆகவேதான் இந்த முனைப்புத் திட்டம் இப்பொழுது செயல்பட்டு வருகிறது.

[1974 சனவரி 19

## சவாரிகொட்டை கிழங்கு உற்பத்தி

* 21 வினு—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-73-ம் ஆண்டில் சவாரிகொட்டை கிழங்கு தமிழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) அதில் ஏற்றுமதி செய்யப்பட்டது எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) 11, 41, 320 (பதிஞேரு லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து மூன்னூற்று இருபது) டன்கள்.

(இ) பூஜ்யம்.

## *Prices of eatables in Hotels*

* **22 Q.**—Thiru N. K. PALANISWAMY :

Thiru K. A. WAHAB :

Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to reduce price of the eatables in hotels in the City of Madras?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகமாகும் நேரங்களில் அரசு, ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு விலைகளைக் குறைக்குமாறு வலியுறுத்தி வருகிறது. அண்மையில் பருப்பு, எண்ணெய் முதலிய பண்டங்களின் விலையேற்றத்தைக் காரணமாகக் கொண்டு, ஓட்டல் உரிமையாளர்கள் உணவுப் பண்டங்களின் விலையைக் கூடுதலாக்கிவிட்டனர். கோதுமை, ரவை, மைதா போன்ற பண்டங்கள் கட்டுப்படுத்திய விலையில் ஓட்டல்களுக்கு வழங்கப் படுவதால் உப்புமா, பூரி இவற்றின் விலையேற்றம் நியாயமற்றதாகக் கருதப்பட்டது. ஓட்டல் உரிமையாளர்களுடன் 5—3—1973 அன்றும், 9—8—1973 அன்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதின் விளைவாக இட்லி, உப்புமா, பூரி, மெதுவடை ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுவிட்டன. அண்மையில் பருப்பு